Sl. No. :



# 2013

# SIDDHA MEDICINE
## (Degree Standard)

Time Allowed : 3 Hours] [Maximum Marks : 300

1. மனித வகுப்பில் சித்தம் தெளிவர், அறிவின்மையர் ஒழுக்கமில்லாதவர் யார் ?

(A) போக மனிதர்
(B) திப்பியர்
(C) மிலைச்சர்
(D) சேகர்

2. கீழ்கண்ட சமயத்தாருள் யார் அவைதீகர் ?

(A) சமணர்
(B) சாங்கியர்
(C) மீமாம்சகர்
(D) நையாயிகர்

3. தமிழில் முறையான சைவ சித்தாந்த நூல்கள், மற்றும் மெய்கண்டான் சாத்திரம் வெளியிடப்பட்ட காலம் திண்ணமாக கூறப்பட்டது எந்த ஆண்டு ?

(A) கி.மு 300 க்கும் கி.பி 100 க்கும் இடைப்பட்ட ஆண்டு
(B) கி.மு 5000 க்கும் கி.பி 200 க்கும் இடைப்பட்ட ஆண்டு
(C) கி.பி 1300 க்கும் கி.பி 1700 க்கும் இடைப்பட்ட ஆண்டு
(D) கி.பி 400 க்கும் கி.பி 1300 க்கும் இடைப்பட்ட ஆண்டு

**4. உயிர் வர்க்கத்தில் "ஆணவம் மலம்" பந்தம் மட்டும் உடையவரை எவ்வாறு அழைக்கப்படுவர் ?**

(A) உத்தமர்
(B) பிரளயாகலர்
(C) விஞ்ஞானகலர்
(D) சகலர்

**5. பாவப் பிராணன்கள் எத்தனை ?**

(A) நான்கு
(B) மூன்று
(C) பத்து
(D) ஏழு

**6. இச்சா பத்தியத்தில் எது சேர்க்க கூடாத காய் ?**

(A) புடலை
(B) கொத்தவரை
(C) முருங்கை
(D) சேம்பு

**7. கர்பிணிகளுக்கு நான்காம் மாதம் கர்பத்தில் வலித்தும் ரத்தமும் வெளியானால் -**

(A) விலாமிச்சு வேர், சந்தனம், தக்கோலம் நீர்விட்டரைத்து பாலில் கலந்து கொடுக்கத் தீரும்
(B) வெண்தாமரை, செங்கழு நீர், கிழங்கு நீர் விட்டரைத்து பாலில் கலந்து கொடுக்கத் தீரும்
(C) ஆம்பல் பூவும், விலாமிச்சை வேர் இவற்றை நீர் விட்டரைத்து பாலில் கொடுக்கத் தீரும்
(D) நெய்தற்கிழங்கும், நொச்சி வேரும் சேர்த்து நீர்வார்த்தரைத்து பாலிற் கொடுக்கத் தீரும்

**8. இச்சா பத்தியத்தில் ஆகும் பொருள் எது ?**

(A) மா
(B) எலுமிச்சை
(C) பலா
(D) உள்ளிப்பூண்டு

**9. சேத்தும சுரத்திற்கு எத்தனை நாள் பட்டினி இடவேண்டும் ?**

(A) மூன்று நாள்
(B) ஏழு நாள்
(C) ஆறு நாள்
(D) ஒன்பது நாள்

**10. நீர்க் கோவை என்னும் நோயில் வேது பிடிக்க பயன்படும் பொருள் எது ?**

(A) எலுமிச்சை பழ விதை
(B) சாம்பிராணி புகை
(C) சுட்ட செங்கல்
(D) எருக்கிலை

**11. பொருத்துக - ஒற்றிடம் இட வேண்டிய பொருளும் இடமும்.**

1. பிரமி இலை — அ) வலிப்பு
2. எருக்கிலை — ஆ) மூட்டு வீக்கம்
3. ஆமணக்கு இலை — இ) குரக்கு வலி
4. ஓமம் — ஈ) வயிற்று வலிக்கு

(A) 1 : இ, 2 : அ, 3 : ஆ, 4 : ஈ
(B) 1 : அ, 2 : ஆ, 3 : ஈ, 4 : இ
(C) 1 : ஆ, 2 : அ, 3 : ஈ, 4 : இ
(D) 1 : ஆ, 2 : ஈ, 3 :அ, 4 : இ

**12. கீழ்கண்ட நூட்களில் ஒன்று மட்டும் யுகி முனிவர் எழுதியது அல்ல. அது எது ?**

(A) வாத வைத்திய விளக்கம்
(B) மதி வெண்பா 120
(C) வாதாங்க தீட்சை விதி 300
(D) நவக்கிரக சுக்கிஷம்

**13. வான்மீகி முனிவரின் "மரபு" எது என்று குறிப்பிடப்பட்டுள்ளது ?**

(A) செம்படவர்
(B) ஓதுவார்
(C) வேடர்
(D) சீனதேசத்தவர்

**14. இராமனாதன் பதிப்பின்படி கமலமுனிவர் சமாதி அடைந்த தலம் எது?**

(A) திருக்காளத்தி
(B) திருவாரூர்
(C) மதுரை
(D) திருக்கடையூர்

**15. அரதன அம்பலம் எனப் பெயர் பெறும் ஊர் எது ?**

(A) திருக்குற்றாலம்
(B) திருநெல்வேலி
(C) சிதம்பரம்
(D) திருவாலங்காடு

**16. நாவின் பேசிப் பகுதிக்கு செல்லும் கபால நரம்பு யாது ?**

(A) நாக்கீழ் நரம்பு
(B) நாத் தொண்டை நரம்பின் நாக்கிளை
(C) ஐந்தாம் நரம்பின் நாக்கிளை
(D) நா நரம்பு

**17. கீழ்கண்டவைகளில் எதனுடைய சாற்றால் இலங்கம் கட்டுப்படும்?**

(A) மன்னா
(B) மயிர்மாணிக்கம்
(C) மரிமா
(D) மரிக்கொழுந்து

**18. முழங்கைப் பொருத்தின் அகமுளியின் பிற்பகுதியில் செல்லும் நரம்பு யாது ?**

(A) இரத்தினி நரம்பு
(B) புய அகச் சரும நரம்பு
(C) மத்திய நரம்பு
(D) புய சுற்று நரம்பு

**19. கண்ணில் சிருங்கைக்கு பின்னும் குயவத்திற்கு முன்னுமாக உள்ள திரை யாது ?**

(A) நயனை
(B) தராகம்
(C) சக்கரவம்
(D) வருணி

20. **அதிக அளவு பாஸ்போ கொழுப்பீனிகளை கொண்டுள்ள கொழுப்பீனி புரதங்கள் -**

(A) அதிக அடர்த்தியுள்ள கொழுப்பீனி புரதங்கள்
(B) குறைந்த அடர்த்தியுள்ள கொழுப்பீனி புரதங்கள்
(C) மிகவும் குறைந்த அடர்த்தியுள்ள கொழுப்பீனி புரதங்கள்
(D) கைலோமைக்ரான்கள்

21. **மகப்பேற்றின் போது கருப்பை கழுந்து ஒன்று அல்லது இரண்டு விரல்களை நுழைய அனுமதித்தால் எதை அறிய முடியும்?**

(A) மாயை
(B) உதய பாகம்
(C) அதிபனி நீர்
(D) கழுந்து புற்று

22. **திரள்வாயு நோயில் வேதுபிடிக்க பயன் படுத்துவது?**

(A) நொச்சியிலைப் பொடி
(B) மஞ்சள் பொடி
(C) உப்புப் பொடி
(D) புளியிலைப் பொடி

23. **பற்கள் மேல் தாடை என்பின் எந்தப் பகுதியுடன் பொருந்தி இருக்கும்?**

(A) நாசி விகம்
(B) தாலு விகம்
(C) கவுள் விகம்
(D) காவட விகம்

24. **பார்வை நரம்பின் பார்வையுகம் கீழ்காண்பவற்றில் எந்த என்பில் உள்ளது ?**

(A) பித்தி என்பு
(B) பாபீர என்பு
(C) சதுக என்பு
(D) கவுள் என்பு

25. முகத்தின் பல பகுதிகளில் இருந்து உதடுகளை நோக்கி வருகின்ற பேசிகளுக்கெல்லாம் எதிர்ப்பேசி எது ?

(A) முறுவலி
(B) அதரமேற்றி
(C) லபனி
(D) தமனி

26. பொது கீரீப நாடியைக் கட்டவும், இரை குழலைத் திறக்கவும் கீறுவதற்கு எப்பேசி முக்கிய எல்லைக் குறிப்பாக இருக்கிறது ?

(A) கண்ட பிஸ்தாரி
(B) நிகரண லேகி
(C) தாலு நிகரணி
(D) வட்ச சூசகி

27. கரப அங்குலிப் பொருத்துகள் எவ்வகையைச் சார்ந்தவை ?

(A) உருள் சந்தி
(B) கிங்கிலு சந்தி
(C) சஞ்சர சந்தி
(D) யோக சந்தி

28. கீழ் காண்பவற்றுள் எது முழந்தாட் பொருத்தின் விசி இல்லை ?

(A) பிறை இழை முருந்துகள்
(B) குருசு விசி
(C) கவை விசி
(D) வலய விசி

29. மனத்துக்கத்தைக் காட்டும் பிரதானமான பேசி எது ?

(A) புரூரி
(B) நிமீலினி
(C) நிமையிறுக்கி
(D) நிமையேற்றி

30. நெந்செனபிர் நுனியில் துவங்கி மேகனாறுசங்கி வரைக்கும் இருப்பது எது ?

(A) உள்வட்சி
(B) சித ரேகை
(C) வக்கிர ரேகை
(D) உட்பழு நடுவி

31. **நெஞ்சுப் பேசிகளில் சுவாசத்தை வெளியே விட உதவுவது எது ?**

(A) உட்பழு நடுவி

(B) வெளிப்பழு நடுவி

(C) உள் வட்சி

(D) பழு வேற்றி

32. **அந்நியச் செலாவணி ஈட்டித்தரும் குமிழ்த்தண்டு ______ ஆகும் .**

(A) டைபோனியம் ட்ரைலோபேட்டம்

(B) சீல்லா ஹைஸின்தைனா

(C) அலியம் ஸட்டைவம்

(D) அர்ஜீனியா இண்டிகா

33. **இலஞ்சி என்ற பூவின் தாவரவியல் பெயர் எது ?**

(A) மைமோஸாப்ஸ் இலங்கி

(B) மெசுவா ஃபெரே

(C) மைக்கேலியா சம்பகா

(D) சின்ன மோமம் வைட்டீ

34. **லைக்கன்களில் பாலினப்பெருக்கத்தின் ஒரு தோற்றம் ________ என்று அழைக்கப்படுகிறது.**

(A) பெரிதீஸியம்

(B) அப்போதீஸியம்

(C) கிளிஸ்டோதீஸியம்

(D) அஸ்கோதீஸியம்

35. **யூபோர்பியேசியே குடும்பத்தில் காணப்படும் மஞ்சரிகள் ______.**

(A) சைமோஸ், ரெசிமோஸ், பானிகிள் & சையாதியம்

(B) சைம், ரெசிம், பானிகிள், காட்கின் & சையாதியம்

(C) ஸ்பைக், ரெசிம், பானிகிள், காட்கின் & சையாதியம்

(D) ஸ்பைக், ரெசிம், சைம், காட்கின் & பானிகிள்

36. **சரியான தாவரப்புற்றுகள் உள்ள வரிசையைத் தேர்ந்தெடுக்கவும்.**

(A) குயர்க்கஸ் இன்ஃபெக்டோரின், ராஸ் ராக்ஸிடோனியா & டெர்மினேலியா பெல்லரிக்கா

(B) குயர்க்கஸ் இன்ஃபெக்டோரியா, ராஸ் சக்ஸிடேனியா& டெர்மினேலியா செபுலா

(C) குயர்க்கஸ் சக்ஸிடேனியா, ராஸ் இன்ஃபெக்டோரியா & டெர்மினேலியா அர்ஜீனா

(D) குயர்க்கஸ் இன்ஃபெக்டோ, ராஸ் ஸைலேனிகம் & டெர்மினேலியா செபுலா

37. ICBN ஐசீபீஎன் என்பது -

(A) இன்டர்நேஷனல் கோட் ஆப் பைனாமியல் நோமென்க்லாட்சர்

(B) இன்டியன் கோட் ஆப் பைனாமியல் நோமென்க்லாட்சர்

(C) இன்டர்நேஷனல் கோட் ஆப் பொட்டானிகல் நோமென்க்லாட்சர்

(D) இன்டியன் கோட் ஆப் பொட்டானிகல் நோமென்க்லாட்சர்

38. அபாய நிலையில் உள்ள தாவர வரிசையை தேர்தெடுக்கவும்.

(A) அட்ரோபா, கர்கியூலுகோ, வென்டிலேகோ & ஆர்கிஸ்

(B) அட்ரோபா, ஒரைசா, எபிட்ரா & பெர்பெரிஸ்

(C) எபிட்ரா, பெர்பெரிஸ், ட்ராஸெரா & போஸ்வீலியா

(D) எபிஸ், எபிட்ரா, ட்ராஸெரா & டால்பெர்ஜியா

39. ஏரென்கைமா ( aerenchyma ) என்ற திசுக்கள் அதிக எண்ணிக்கையில் காணப்படும் தாவர வகுப்பு -

(A) உவர் நிலத் தாவர வகுப்பு

(B) வறண்ட நிலத் தாவர வகுப்பு

(C) நீர் நிலத் தாவர வகுப்பு

(D) மூன்றும் சரியான விடை

40. சுவாச வேர்கள் _______ வகை தாவரங்களில் மட்டும் காணப்படும் .

(A) ஹைட்ரோபைட்டுகள்

(B) ஸெரோபைட்டுகள்

(C) ஸேமோபைட்டுகள்

(D) ஹேலோபைட்டுகள்

41. தாளிசபத்திரியில் இருந்து பிரித்தெடுக்கப்படும் வேதிப் பொருள் எந்த நோயை குணப்படுத்த நல்லது ?

(A) ஆஸ்துமா, தோல் நோய், இசிவு & காக்காய் வலிப்பு

(B) ஆஸ்துமா, புற்றுநொய், காக்காய் வலிப்பு & இசிவு

(C) புற்றுநோய், இசிவு, காக்காய் வலிப்பு & சூதகசன்னி

(D) மாந்தசுரம், காக்காய் வலிப்பு, சூதகசன்னி & சுவாச நோய்

42. உலர் தாவரத் தொகுப்பு ( Herbarium ) என்னும் சொல் ______ என்பவரால் புனையப்பட்டது.

(A) ஜியார்ஜ் பெந்தம்
(B) சர் ஜோசப் ஹூக்கர்
(C) டால்டன் ஹூக்கர்
(D) கரோலஸ் லினெயஸ்

43. போட்டானிக்கல் ஸர்வே ஆப் இன்டியா ( Botanical survey of India ) ( BSI ) ( பிஎஸ்ஐ ) இருக்கும் இடம் ______ .

(A) லக்னோ
(B) சென்னை
(C) கோயம்புத்தூர்
(D) மதுரை

44. பூத்தளம் நீண்டு கூம்பு வடிவத்திலும், இலைகளில் எண்ணெய் சுரப்பிகளுடைய, பல மகரந்தாள்கள் மற்றும் பல இணையாத சூலக இலைகளுடைய தாவரங்கள் ______ குடும்பத்தில் காணப்படும்.

(A) ரானான் குலேசியே
(B) மாக்னோலியேசியே
(C) அனோனேசியே
(D) மெனிஸ்பெர்ம்மேசியே

45. சூரிய காந்தி குடும்பத்தில் காணப்படும் மஞ்சரியின் பெயர் ______ ?

(A) காரீம்ப்
(B) காபிடியூலம்
(C) காம்பவுண்ட் அம்பல்
(D) டை காஷியல் சைம்மோஸ்

46. டைடினாமஸ் ஆன்த்ரஸ் காணப்படும் மலர் ______ .

(A) தெஸ்பீஸியா
(B) கிளைடோரியா
(C) லுயூகஸ்
(D) குரோடலேரியா

47. கண்டத்தின்கண் வளி பத்து, அகபுறங்கலன் நான்கு, ஆகப் பதினான்கு கருவிகளும் தொழிற்படும் நிலையில் பெயர் என்ன ?

(A) விழிப்பு
(B) கனவு
(C) உறக்கம்
(D) துரிய நிலை

48. சித்தர்கள் ஆன்ம சக்தியை எவ்வாறு கூறுகின்றனர் ?

(A) குண்டலினி சக்தி (B) இச்சா சக்தி

(C) கிரியா சக்தி (D) பிராப்த சக்தி

49. விழிவளி எது ?

(A) நாகன் (B) கூர்மன்

(C) தேவதத்தன் (D) தனஞ்செயன்

50. ஈரலில் சேமிக்கப்படும் சீவ சர்க்கரையின் அளவு என்ன ?

(A) 80 கிராம் (B) 100 கிராம்

(C) 150 கிராம் (D) 180 கிராம்

51. நிணப்பொருள்கள் சாதாரணமாக உடலின் உறுப்புகளில் எத்தனை விழுக்காடு இருக்க வேண்டும் ?

(A) 5 - 10 விழுக்காடு (B) 10 - 20 விழுக்காடு

(C) 20 - 25 விழுக்காடு (D) 25 - 30 விழுக்காடு

52. வெளித் தள்ளப்படும் விந்து நீரில், விந்து அணுக்களின் எண்ணிக்கை எவ்வளவு ?

(A) இரண்டு இலட்சம் (B) இருபது இலட்சம்

(C) இரண்டு கோடி (D) இருபது கோடி

53. திரிவிந்திரிய சீவன் எது ?

(A) தேள் (B) ஈ

(C) தேனீ (D) பேன்

54. வீதன கோளத்தின் முன்வளம் எந்தெந்த பேசிகளால் மூடப்பட்டிருக்கிறது ?

(A) தனுவட்சி, வாகுமேவி, சிறுவட்சி

(B) சிறுவட்சி, தனுவாகி, வாகுமேவி

(C) தனுவட்சி, வீதனவட்சி, தனுவாகி

(D) தனுவாகி, வாகுபேசி, மும்முகி

55. மூண்டக் கண் எந்த நோயில் ஏற்படும் ?

(A) குறை வீதன நோய்

(B) அதி வீதன நோய்

(C) குறை சுவலி நோய்

(D) அதி சுவலி நோய்

56. எந்த சுரப்பி குறைவதால் குள்ளமாகவும், மந்த புத்தியும் ஏற்படும் ?

(A) சுவலிச் சுரப்பி

(B) வீதன கோள சுரப்பி

(C) பக்க வீதன கோள சுரப்பி

(D) பிருக்கோபரி சுரப்பி

57. கடை அமசி நீரில் உள்ள காலிலிகப் பொருள்களின் அளவு என்ன ?

(A) 0.1

(B) 0.03

(C) 0.004

(D) இல்லை

58. குகா நாளத்தில் குருதி அழுத்தம் எவ்வளவு ?

(A) 0.8 மி.மீ பாதரசம்

(B) 3 மி.மீ பாதரசம்

(C) 9 மி.மீ பாதரசம்

(D) 30 மி.மீ பாதரசம்

59. குருதியில் புரத சமநிலைத் திட்டத்திற்கு உட்செலுத்தப் பயன்படுவது எது ?

(A) குருதி பேசி அமிலம்

(B) தட்டணுக்கள்

(C) குருதி வசா நீர்

(D) குருதி வபா நீர்

60. **பெண்களுக்கு குருதியில் இருக்கும் செவ் விலங்களின் எண்ணிக்கை எவ்வளவு ?**

(A) 5,00,000 / கன மி.மீ
(B) 4,50,000 / கன மி.மீ
(C) 50,00,000 / கன மி.மீ
(D) 45,00,000 / கன மி.மீ

61. **குருதி அழுத்தத்தை அதிகப்படுத்தும் சத்தி எது ?**

(A) முன் சுவலிச் சத்து
(B) பின் சுவலிச் சத்து
(C) சினைப்பைச் சத்து
(D) பிருக்கோபரி காரைச் சத்து

62. **இம்யூனோகுளோபுலின் மூலக்கூறுகள் எவற்றால் ஆக்கப்பட்டவை ?**

(A) லிப்போ புரதங்கள்
(B) பாஸ்போ புரதங்கள்
(C) கிளைகோ புரதங்கள்
(D) எளிய புரதங்கள்

63. **ஹார்மோனால் தூண்டப்படக் கூடிய லிபேஸ் செயலை தடுக்கும் ஹார்மோன்-**

(A) எபிநெஃப்ரின்
(B) இன்சுலின்
(C) தைராக்சின்
(D) குளுகோகார்டிகாய்டுகள்

64. **பிளாஸ்மா கால்சியத்தின் சரியான அளவு ?**

(A) 3 - 5 மில்லி கிராம் %
(B) 9 - 11 மில்லி கிராம் %
(C) 15 - 18 மில்லி கிராம் %
(D) 20 - 24 மில்லி கிராம் %

65. **கீடோன் பொருட்கள் இதில் உற்பத்தியாகிறது ?**

(A) கொழுப்பு திசு
(B) கல்லீரல்
(C) தசை
(D) மூளை

**66. இயல்பிழத்தலின் போது, புரதத்தின் அமைப்பில் உள்ள இந்த பிணைப்புகள் உடையாது.**

(A) ஹைட்ரஜன் பிணைப்புகள்
(B) பெப்டைடு பிணைப்புகள்
(C) அயோனிக் பிணைப்புகள்
(D) டைசல்ஃபைடு பிணைப்புகள்

**67. இந்த ஒற்றைச் சர்க்கரைகளில் ஒன்று ஆல்டோஸ் அல்ல.**

(A) குளுகோஸ்
(B) கேலக்டோஸ்
(C) மேனோஸ்
(D) ப்ரக்டோஸ்

**68. இந்த ஹார்மோன் குறைவாக சுரப்பதால் டயாபடீஸ் இன்ஸிபிடஸ் என்ற சீர்குலைவு ஏற்படுகிறது.**

(A) இன்சுலின்
(B) குளுக்கான்
(C) வேசோபிரெசின்
(D) ஆக்ஸிடோசின்

**69. இந்த தாதுபொருட்களில் ஆக்ஸிஜனேற்ற எதிர்ப் பொருளாக செயல்படுவது -**

(A) செலீனியம்
(B) புளோரின்
(C) குரோமியம்
(D) மாலிப்டீனம்

**70. அதிக திறன் கொண்ட வைட்டமின்-D யின் வகை -**

(A) கோலிகால்சிஃபெரால்
(B) எர்கோகால்சிஃபெரால்
(C) டீஹைட்ரோ கொலஸ்ட்ரால்
(D) கால்சிட்ரையால்

**71. தையமின் என்ற வைட்டமின் குறைபாட்டால், சிறுநீரில் கழிவாக வெளியேறும் வளர்சிதை மாற்ற வினை பொருள் -**

(A) பைருவேட்
(B) குளுகோஸ்
(C) சேன்ந்த்யூரினிக் அமிலம்
(D) பார்ம் இமினோ குளுடாமிக் அமிலம்

72. இந்த உறை காரணியின் குறைபாட்டால் ஹீமோஃபிலியா A ஏற்படுகிறது.

(A) X
(B) V
(C) VIII
(D) II

73. இரத்தத்தில் உள்ள அல்புமின் புரதத்தின் உயிர்வேதியியல் செயல்கள்?

(A) ஆஸ்மாடிக்
(B) ட்ரான்ஸ்போர்ட்
(C) நியூட்ரிடிவ்
(D) மேலே உள்ள மூன்றும்

74. புரதத்தின் அமைப்பில் காணப்படும் இமினோ அமிலம்

(A) ஆர்ஜினின்
(B) புரோலின்
(C) ஹிஸ்டிடின்
(D) லைசின்

75. லெசிதின் எனும் பாஸ்போ கொழுப்பீனியில் உள்ள நைட்ரஜன் காரம்-

(A) கோலின்
(B) எதனாலமைன்
(C) இனோசிடால்
(D) செரின்

76. உமிழ்நீர் ஆல்ஃபா அமிலேஸ், வயிற்றில் செயல் இழப்பதற்கு முக்கியமான காரணம் ?

(A) அதிக அமிலத்தன்மை
(B) கேஸ்ட்ரிக் பெப்சினால் உடைக்கப்படுவது
(C) குளோரைடினால் தடுக்கப்படுவது
(D) பெப்டைடுகளால் தடுக்கப்படுவது

77. கீழ்கண்டவைகளில் எதனுடைய பூச்சாற்றை தேன் கலந்து உட்கொள்ள விக்கல் நீங்கும் ?

(A) பாதிரி
(B) புளி
(C) இலுப்பை
(D) செம்பருத்தி

78. கீழ்கண்டவற்றுள் எது சில புழு பூச்சிகளால் மாடுகளுக்கு உண்டாகும் நோயை வரவிடாமற் தடுக்கப் பயன் படுகிறது ?

(A) விடமூங்கில்
(B) விழுதி
(C) விடத்தேர்
(D) மருள்

79. அயிலேயம் என்ற வேறு பெயரால் அழைக்கப்படுவது எது ?

(A) முசுட்டை
(B) முசு முசுக்கை
(C) முடக்கற்றான்
(D) முயற்காதிலை

80. சீவர்களுக்கு உண்டாகும் அவத்தையில் "அகம்பாவம்" என்பது எந்த அவத்தையில் உண்டாவது?

(A) மூடல்
(B) குளிர்மையாதல்
(C) கண்ட ஞானம்
(D) தழல் கெடல்

81. கீழ்கண்டவைகளில் எதனுடைய வேரால் பத்தியக் கேட்டால் உண்டான கேடுகள் யாவும் நீங்கும் ?

(A) தேற்றான்
(B) கலியாணப் பூசணி
(C) நெல்லி
(D) நிலப்பூசணி

82. சுதம் என்ற வேறு பெயரால் அழைக்கப்படுவது எது ?

(A) நீர்முள்ளி
(B) நில வேம்பு
(C) நெருஞ்சில்
(D) நெட்டிலிங்கம்

83. பற்பொருத்து எவ்வகை சந்தியை சார்ந்தது?

(A) கம்வசிச் சந்தி
(B) மிசிர சந்தி
(C) தரிக சந்தி
(D) சந்சர சந்தி

84. ________ கறியுடன் சீந்தில் உப்புக் கூட்டிச் சமைத்து அருந்த உடலில் உண்டாகும் காயங்கள் நீங்கும்.

(A) நத்தை
(B) ஆமை
(C) கலை மான்
(D) உடும்பு

85. இபமெனில்மைதுனம் என்ற அடி இடம் பெறும் நூல் ?

(A) தேரர் மகாகரிசல்
(B) பதார்த்த குண சிந்தாமணி
(C) தேரர் கரிசல்
(D) தேரன் தரு

86. முசுறு முட்டை எண்ணெய் பயன் படுத்தும் முறை ?

(A) நசியம்
(B) பேதி
(C) வேது
(D) வமனம்

87. ஊன் செய் பொருளும், கொழுப்புப் பொருளும் குறைவுபட்டால் -

(A) வெள்ளாட்டுப் பால்
(B) பசும் பால்
(C) காராம் பசுவின் பால்
(D) கழுதைப் பால்

88. மான் குழம்பினால் தீரும் நோய்கள் ?

(A) பல் நோய்கள்
(B) மூக்கு நோய்கள்
(C) காது நோய்கள்
(D) கண் படலங்கள்

89. **கீழ்கண்டவைகளில் வேப்பம் பட்டைத் தைலத்தில் சேரும் சரக்கு எது?**

(A) கப்பு மஞ்சள்
(B) மர மஞ்சள்
(C) கஸ்தூரி மஞ்சள்
(D) எதுவுமில்லை

90. **கீழ்கண்ட எந்த எண்ணெயினால் பல வகை மருக்கள் பாலுண்ணிகள், புடைகள் முதலியன தீரும் ?**

(A) விளாம் பழ ஓடு
(B) மாதுளை ஓடு
(C) முந்திரி கொட்டை ஓடு
(D) வாதுமை ஓடு

91. **மிருத்யுஞ்சயம் செந்தூரமாகும் முறை எது ?**

(A) அரைத்துச் சிவக்கச் செய்வன
(B) வறுத்துச் சிவக்கச் செய்வன
(C) எரித்துச் சிவக்கச் செய்வன
(D) சூரிய ஒளியில் வைத்து எடுப்பது

92. **கீழ்கண்ட எந்த குடிநீரினால் வாய் கொப்புளித்து வர, வயது முதிர்ந்தவர் பற்களும் இளைஞர் பற்கள் போன்று உறுதி பெறும்?**

(A) தேற்றான் விதைக் குடிநீர்
(B) ஆவாரைக் குடிநீர்
(C) மருக்காரைக் குடிநீர்
(D) மாதுளம் பிஞ்சுக் குடிநீர்

93. **புட்பராகத்தை எதனுடைய சாற்றிலிட்டு ஊற வைத்து மூசையிலிட்டு ஊத நீறும் ?**

(A) முள்ளங்கி கிழங்கு சாறு
(B) துத்தியிலைச் சாறு
(C) குமரிச் சாறு
(D) சிறுபீளைச் சாறு

94. மாதேவ பலம் என்று வழங்கப்படும் பற்பம் யாது ?

(A) பொன் அரிதாரம்
(B) பவுத்திக பற்பம்
(C) கந்தக பற்பம்
(D) வீர பற்பம்

95. மவுத்திக பற்பத்தினை உட்கொள்ளும் உத்தமமான அளவு யாது ?

(A) தினையின் ஆறில் ஒரு கூறு
(B) சாமையின் ஆறில் ஒரு கூறு
(C) துவரைக் கொட்டையில் ஆறில் ஒரு கூறு
(D) அவரைக் கொட்டையில் ஆறில் ஒரு கூறு

96. ... மேவியடர் நோயின் வெப்பத்தை மாற்றுதலாற்... என்று தேரன் பொருட்பண்பு நூல் எதை பற்றிக் கூறுகிறது ?

(A) கௌரி
(B) செந்தூரத்தாதி
(C) மால்தேவி
(D) வாணி

97. வெள்ளையில் 130 மி.கி காடிகாரத்தை எத்தனை மி.லி நீரில் கலந்து பீச்சாக பயன்படுத்தலாம்?

(A) 260 மி.லி
(B) 360 மி.லி
(C) 560 மி.லி
(D) 760 மி.லி

98. நீரில் விட்ட எண்ணெய் துளியானது சீக்கிரமாகத் திரை போல நீண்டால் குருதி கெட்டு குறைந்ததாலுண்டானது.

(A) இதய நோய் நீர்
(B) இரத்த மிகுந்த வெப்பு நீர் நெய்க்குறி
(C) இரத்தக் குறைவு நீர்நெய்க்குறி
(D) சீத மிகுதி நீர் நெய்குறி

99. சுக்கிலம் தேனையும், அதன் நிறத்தையும் கனத்தையும் ஒத்திருந்தால் ?

(A) அதம மத்திமம்
(B) மத்திம மத்திமம்
(C) அதமோத்தமம்
(D) அதமாதமோத்தமம்

100. ________நோயிலுண்டாம் தோடக்குறி குணங்கள் இளைப்பு, சுவாசம், விக்கல், வீக்கம், மயக்கம் இவை சேர்ந்துண்பதில் சாவு நிச்சயம்.

(A) இளைப்பு நோய்
(B) மேக நோய்
(C) சுர நோய்
(D) பாண்டு

101. சோக சன்னிக்கு தாளகத்தை கீழ் கண்ட எப்பொருளுடன் கூட்டி இழைத்து பயன்படுத்த வேண்டும் ?

(A) மூக்கு நீர்
(B) கொப்பூழ் அழுக்கு
(C) சிறுநீர்
(D) முலைப்பால்

102. எவ்வகையான உளைமாந்தை நோயில் வாந்தியில் சீழ்கலந்து வெளியாகும் ?

(A) வளி உளை மாந்தை
(B) அழல் உளை மாந்தை
(C) ஐய உளை மாந்தை
(D) முக்குற்ற உளை மாந்தை

103. நட்பு நோய் என்பது ?

(A) பெருங்கழிச்சல்
(B) நிரைக்கழிச்சல்
(C) கருப்பு கழிச்சல்
(D) ஊழி

104. கீழ்கண்ட எந்தக் கொட்டையை தேனில் இழைத்துக்கொடுக்க விக்கல் போம் ?

(A) வாதங்கொட்டை
(B) தேற்றாங்கொட்டை
(C) தாமரைக் கொட்டை
(D) சேராங்கொட்டை

105. 'ஆகாந்துவம்' என்பது எதைப்பற்றியது ?

(A) இரைப்பை
(B) பசதம்
(C) மனம்
(D) கருப்பை

106. 'சோம நோய்' என்பது எதனை குறிக்கும் ?

(A) வெண்ணீர்

(B) தெளி நீர்

(C) குடிவெறி நோய்

(D) சந்திர வர்த்தம்

107. 'எரி எண்ணெய் இட்டு காயத்து உமிழ்தல்' - எவ்வகையான வாந்தி நோய்க்கு மருத்தவம்?

(A) சூல் வாந்தி

(B) மல வாந்தி

(C) கண்ணேறு வாந்தி

(D) குருதி வாந்தி

108. பஞ்ச பூத நாடிகளுக்கு நடுமையமாக நின்று ஐந்து நாடிகளின் நடைமுறைக்கு ஏற்ற உதவி புரிவது?

(A) சீவநாடி

(B) ஆத்மநாடி

(C) குருநாடி

(D) பஞ்ச பூத பஞ்சீகரணம்

109. வாரடங்கல் என்பது கீழ்கண்ட வற்றுள் எம்முறை ?

(A) விலாவில் கைவைத்து தூக்குதல்

(B) சூசகபள்ளத்தில் காதின் கீழ்கைவைத்து தூக்குதல்

(C) பேராசன அண்ணில் கைவைத்து தூக்குதல்

(D) கீழ்த்தாடை கோனத்தில் கைவைத்து தூக்குதல்

110. எந்த நோய் உள்ளவர்க்கு சிரங்குவரின் அது விரைவில் குணப்படுவதில்லை ?

(A) கரப்பான் நோய்

(B) அக்கி நோய்

(C) மருள் நோய்

(D) மேக நோய்

111. மகப்பேற்றில் கூபகத்தரையின் உருவமாற்றம் எந்தக்கட்டத்தில் நடைபெறுகிறது ?

(A) முதல் கட்டம்

(B) இரண்டாம் கட்டம்

(C) மூன்றாம் கட்டம்

(D) அனைத்து கட்டங்களிலும்

112. குழந்தைகளுக்கு சூடு அதிகம் தெரியாமல், சாமத்திற்கு ஒரு முறை அதிகமாக காணும் சுரம் எது ?

(A) ஆம சுரம்
(B) கப சுரம்
(C) வாத சுரம்
(D) கழிச்சலி சுரம்

113. புணர்ச்சி வலி தோன்றக் காரணம் ?

(A) பெரும்பாடு
(B) இயற்கையாக வலி தோன்றல்
(C) யோனித்துவார குழல் குறுகல்
(D) சலப்பை பிதுக்கம்

114. சுரத்திற்கான முதல் காரணம் எது ?

(A) வாதம்
(B) பித்தம்
(C) கபம்
(D) முக்குற்றம்

115. அகட்டு புற்று நோய் போன்ற குறிகுண்ம் எற்படுத்தும் குன்ம நோய் பிரிவு எது ?

(A) பித்த குன்மம்
(B) கப குன்மம்
(C) வலி குன்மம்
(D) குருதி குன்மம்

116. குன்ம நோயில் வாந்தியை உண்டாக்கி குற்றம் தன்னிலை படுத்த பயன்படும் குடிநீர் எது ?

(A) நிலவேம்பு குடிநீர்
(B) பற்படாக குடிநீர்
(C) வசம்பு குடிநீர்
(D) கொடி வேலி குடிநீர்

117. ஐய சுரத்தில் வழங்கபடும் வீர செந்த்தூரத்தின் அளவு யாது ?

(A) எள் அளவு
(B) பயறளவு
(C) குன்றி அளவு
(D) அரிசி அளவு

**118. சுவையின்மை நோயில் முதன்மையாக பாதிக்கபடும் குற்றம் யாது ?**

(A) வளிக் குற்றம்

(B) அழல் குற்றம்

(C) ஐய குற்றம்

(D) வளி ஐய குற்றம்

**119. 'வெள்ளி அடலை' - எந்த நோயை பரிகரிக்க வழங்கப்படுகிறது ?**

(A) சன்னி நோய்

(B) இளைப்பு நோய்

(C) வமனம்

(D) சோபை

**120. தமரக நோயில் மார்பு வலி நீங்க பயன்படுத்தும் பற்று மருந்து எது ?**

(A) செம்மரப்பற்று

(B) காவிக்கல் பற்று

(C) முட்டை ஒட்டு பற்று

(D) கலைக்கொம்பு பற்று

**121. சினை முட்டை வெளிப்பட்டு கருவுறுதல் நடைபெறாவிட்டால் எத்தனையாவது (பூப்புச்சுழற்சியின்) நாள் பொய்பீதகம் உருவாகிறது?**

(A) 7ம் நாள்

(B) 15ம் நாள்

(C) 18ம் நாள்

(D) 22ம் நாள்

**122. பொதுவாக 30 வாராங்களுக்குள் எற்படும் மகப்பேற்றில் எந்த உதயம் அதிகமாக காணப்படுகிறது ?**

(A) புட்டோதயம்

(B) முக உதயம்

(C) இரட்டை குழவி சூலி

(D) குறுக்குதயம்

**123. குறுக்கு படுத்தல் நிலையில் உதயபாகமாக தோன்றுவது எது ?**

(A) கை

(B) முன்கை

(C) தோள்

(D) புட்டம்

124. மகளிரின் வெளிபிறப்பு உறுப்புகளாக எத்தனை கூறப்பட்டுள்ளது ?

(A) 7
(B) 9
(C) 10
(D) 5

125. சூல் கொண்ட மகளிரில் மகவின் உறுப்புகளை எத்தனையாவது மாதத்தில் தொட்டு தடவி அமர்த்தி அறிந்து கொள்ளாலாம் ?

(A) 3ம் மாதத்தில்
(B) 4ம் மாதத்தில்
(C) 5ம் மாதத்தில்
(D) 9ம் மாதத்தில் மட்டும்

126. சூல் மகளிருக்கு சூல் முடிவில் மாயையின் நீளம் எவ்வளவு ?

(A) 20 cm
(B) 25 cm
(C) 30 cm
(D) 35 cm

127. மகப்பேற்றின் எந்த நிகழ்ச்சியின் போது மகவு கபாலத்தின் குறுக்குவிட்டம் மெய்கூபகத்தினுள் பொருந்துகிறது ?

(A) இறங்கல்
(B) மடங்கல்
(C) நீட்டல்
(D) திருகல்

128. சூல் கொண்ட மகளிருக்கு எத்தனையாவது மாதத்தில் மகவின் குருதி ஒட்ட ஒலியை கேட்கலாம்?

(A) 2வது மாதத்தில்
(B) 3வது மாதத்தில்
(C) 4வது மாதத்தில்
(D) 9வது மாதத்தில்

129. சூலில் எத்தனை வாரங்கள் வரையில் சூல் தடை சாதாரணமாக நீடிக்கிறது ?

(A) 36
(B) 40
(C) 42
(D) 48

130. **பனிக்குடம் மகப்பேற்றிற்கு முன்பே உடைவதால் எற்படும் பக்கவிளைவு என்ன ?**

(A) சத்தியற்ற கருப்பை
(B) மகவு இறங்கலில் தாமதம்
(C) மகவு கூபக அறையில் நுழையாதிருத்தல்
(D) மேற்கண்ட எல்லாம்

131. **பவுத்திரம் தீர அக்கமணி இழைத்த தெளிநீரில் கொடுப்பது ?**

(A) காந்த பற்பம்
(B) நாக பற்பம்
(C) தங்க பற்பம்
(D) இரசபற்பம்

132. **எந்தவகைப் புண்ணில் பசுமூத்திரம் போன்றும், குருதிபோன்றும் நீரொழுகும் ?**

(A) குருதிப் பித்தப்புண்
(B) பித்த ஐயப்புண்
(C) குறுதிப் புண்
(D) குருதிவளிப் பித்தப் புண்

133. **கார மருத்துவத்தின் கீழ் வரும் பிரிவு எது ?**

(A) ஒற்றடம்
(B) வேது
(C) பொடி
(D) பீச்சல்

134. **அறுவைமருத்துவத்திற்கு பயன்படும் சலாகையின் நிறை ?**

(A) 3 கழஞ்சு
(B) 6 கழஞ்சு
(C) 12 கழஞ்சு
(D) 18 கழஞ்சு

135. **கீழ்க்கண்டவற்றில் எதில் அழலும் ஐயமும் தன்னில் வளர்ச்சியடையும்?**

(A) முகப்பரு
(B) கொப்புளம்
(C) அக்குள் கொப்புளம்
(D) அக்குள் கட்டி

136. அக்குள் கட்டிகளுக்குப் பரிகாரம் ?

(A) மூங்கில் பற்று

(B) வெண்ணையுடன் செம்மண் கலந்த பூச்சு

(C) பச்சை எருவை

(D) அமிர்த மெழுகு

137. முடமயிர் களிம்பில் சேரும் மருந்துகள் ?

(A) பச்சைக்கற்புரம் + துருசு + வெண்ணை

(B) நந்தியாவட்டம் பூச்சாறு + துருசு

(C) வெண்ணை + சாரணைப்பொடி

(D) தேங்காயெண்ணை + துருசு

138. குடலண்டத்தில் குடல் முற்றும் அண்டத்துக்குள் இறங்குவதற்கு முன்பு சுட்புகையிடும் இடம் ?

(A) தொடைக்கவுடு

(B) கால் பெருவிரல்

(C) ஆண்குறியின் மேல்பாகம்

(D) நடுமுதுகு

139. கண்டமாலை நோயில் வெளிப்பூச்சிற்கு கருங்கல்லை மற்றொரு கருங்கல்லால் இழைக்கப் பயன் படுத்துவது ?

(A) பசும் பால்

(B) ஆட்டுப்பால்

(C) தாய்ப்பால்

(D) எருமைப்பால்

140. முன் பூப்புக்காலத்தில் எந்த ஹார்மோன் சுரப்பு குறைவதால் சஞ்சயமுற்ற தசிரங்கள் மற்றும் சளிச்சவீவு பிரிகின்றன?

(A) ஈஸ்ரோஜன்

(B) புரோஜஸ்ட்ரான்

(C) ஆன்ரோஜன்

(D) தைராக்ஸின்

141. பகந்திரம் என்ற நோயை உண்டாக்க்க் கூடிய கிருமி எது ?

(A) வைரஸ்

(B) சிறுநாதன்

(C) நாகப்பூச்சி

(D) கொக்கிப்புழு

**142. வாத நாடி தன்னளவில் இரண்டு மாத்திரையும் ஐயநாடி தன் அளவாகிய கால் மாத்திரைக்கு மேலும் அரைமாத்திரைக்குள்ள்டங்கியும் நடைபெறும்-**

(A) வாதபித்த தொந்தம்

(B) வாதஐய தொந்தம்

(C) பித்தவாத தொந்தம்

(D) பித்தஐய தொந்தம்

**143. வளைவு வடிவமாய் கிளம்பிச் சோம்பலை உண்டாக்கக் கூடிய வாயு எது ?**

(A) இடுகரன்

(B) தனஞ்செயன்

(C) கூர்மன்

(D) தேவதத்தன்

**144. வாதம் வளர்ச்சி பெறும் மாதங்கள் ?**

(A) பங்குனி முதல் ஆனி

(B) கார்த்திகை முதல் மாசி

(C) ஆடி முதல் ஐப்பசி

(D) சித்திரை முதல் ஆவணி

**145. எச்சிலை உமிழ்ந்தால் ஆட்டு வாயிலிருந்து ஒழுகும் உமிழ்நீர் போலானால் __________.**

(A) வாத சத்தி

(B) வாத சன்னி

(C) சன்னி முர்ச்சை

(D) வாத முலம்

**146. முப்பு தொட்டுக் கற்பமுண்டறியாதார்க்கு எப்போதுங் காலனெமன்**

(A) அகத்தியர்

(B) யூகிமுனிவாதக்கோவை

(C) தொல்காப்பியர்

(D) தாயுமானவர்

**147. இனிப்பு, துவர்ப்பு, கைப்பு இம்மூன்றும்**

(A) சீத வீர்யம்

(B) உஷ்ண வீர்யம்

(C) மித வீர்யம்

(D) அதி உஷ்ண வீர்யம்

148. **வறட்சி, குளிர்ச்சி, சாந்தம், கெட்டி, இனிப்பு, கசப்பு.**

(A) பித்த தோடம் வன்மையடையும் போது உண்டாகக் கூடிய குணங்கள்

(B) வாத தோடம் வன்மையை நீக்கக்கூடிய எதிர்க்குணங்கள்

(C) பித்த தோட வன்மையை நீக்கக்கூடிய எதிர்க் குணங்கள்

(D) ஐயம் வன்மையடையும் போது உண்டாகக்கூடிய குணங்கள்

149. **மலம் சிறுத்தம் வெம்மையாயும் சிவந்தும் மஞ்சள் நிறமாயும் உள்ளவை-**

(A) வாத நோய்

(B) பித்த நோய்

(C) கப நோய்

(D) தொந்த நோய்

150. **அன்னசாரத்தை சேர வேண்டிய இடங்களில் சேர்ப்பிக்கும் வாயுவின் நிறம் எது ?**

(A) நீலநிறம்

(B) கருமைநிறம்

(C) செம்மைநிறம்

(D) பச்சைநிறம்

151. **சீதேவியார் செங்கழுநீரை நல்ல குணத்தைக் கொடுக்க எவ்வளவு நாள் வழங்கலாம்?**

(A) ஒரு மண்டலம்

(B) கால் மண்டலம்

(C) அரை மண்டலம்

(D) ஒன்றரை மண்டலம்

152. **யானைக்கால் நோய்க்கு கொடுக்கப்படும் அகத்தியர் குழம்பு அளவு?**

(A) 1 முதல் 2 குன்றியளவு

(B) 1/2 முதல் 1 குன்றியளவு

(C) 1 முதல் 2 அரிசியெடை

(D) 1/2 முதல் 1 அரிசியெடை

**153. கபாலப்பிளவை நோய்க்கு கொடுப்பது-**

(A) உத்தாமணி எண்ணை

(B) சடைச்சி எண்ணை

(C) துவரெண்ணெய்

(D) கையாந்தகரை எண்ணை

**154. பாவை கருவிழியில்**

(A) 1/5 பாகம்

(B) 1/7 பாகம்

(C) 1/2 பாகம்

(D) 1/3 பாகம்

**155. கண்ணோய் பரிகாரத்தில் அட்டை விடும் நேரம் -**

(A) காலை

(B) நண்பகல்

(C) மாலை

(D) இரவு

**156. எந்தக்கொருக்கு நோயில் ஆண்குறி தடித்தும் திணிப்பாகவும் மினுமினுத்தும் கானப்படும்?**

(A) ஐயக்கொருக்கு நோய்

(B) குருதிக்கொருக்கு நோய்

(C) அழற்கொருக்கு நோய்

(D) வளிக்கொருக்கு நோய்

**157. கீழ்கண்ட மூலங்களில் எந்த மூலம் தீராது ?**

(A) கிரந்தி மூலம்

(B) பவுத்திர மூலம்

(C) மேக மூலம்

(D) தமரக மூலம்

**158. இரும்புக்கிட்டத்தூள் ஒற்றடம் -**

(A) சீதள நோய் போக்க

(B) மார்பு சளியைப் போக்க

(C) வாத நோய்கள் போக்க

(D) வழக்கத்தில் இல்லை

**159. அவத்தை பத்தில் வல்லாதியின் நாடிபடி கண் பஞ்சடைதல் -**

(A) 5ம் அவத்தை

(B) 3ம் அவத்தை

(C) 7ம் அவத்தை

(D) 8ம் அவத்தை

**160.** **மானனையீர் சூலை திரள் வியாதி வீக்கம் வருஞ்சத்தி சுவாசம்நெஞ் சடைப்பு தூக்கம் இவ்வரிகள் இடம்பெறும் நூல்-**

(A) சதக நாடி
(B) அகத்தியர் திரட்டு நாடி
(C) காவியத்தின் நாடி
(D) ப.சி.நாடி

**161.** **அடிக்கடி நாக்கை நீட்டிக் கொண்டிருக்கும் கிரிகை எது ?**

(A) வாத கிரிகை
(B) சிலேற்பனக் கிரிகை
(C) நாதவிந்து கிரிகை
(D) எச்சில் கிரிகை

**162.** **அக்கிநோய் தீர்ந்தபின் வலி இருந்தால் அதற்க்கு எவ்வகையான மருந்து பயன்படுத்தலாம்?**

(A) பறங்கிப் பட்டை சூரணம்
(B) காவிக்கல் சூரணம்
(C) அமுக்குரா சூரணம்
(D) ஏலறி சூரணம்

**163.** **காக்கைவலிப்பு நோயாளியின் சிறுநிரில் எப்பொருள் காணப்படும்?**

(A) குருதி காணப்படும்
(B) ஊண் காணப்படும்
(C) மஜ்ஜை காணப்படும்
(D) புரதப் பொருள் காணப்படும்

**164.** **நரம்புகளில் கபம் சேரும் வலிப்பு நோய் எது ?**

(A) மனோவலி
(B) தமரகவலி
(C) சுரவலி
(D) வில்வலி

**165.** **விக்கல் நோயில் வளர்ச்சி அடையும் கால்கள் யாவை?**

(A) மேல் நோக்கு கால் + நாகன்
(B) கீழ் நோக்கு கால் + நாகன்
(C) நடுக்கால் + நாகன்
(D) உயிர்க்கால் + நாகன்

166. 18 கிரிகைக்குமான குழம்பு மருத்துவம் எத்தனை உள்ளுக்கு கொடுக்கலாம்?

(A) எழு நாட்கள்

(B) இருப்பத்தி ஒரு நாட்கள்

(C) மூன்று நாட்கள்

(D) ஒரு மண்டலம்

167. உதறல் உண்டாக்கும் கரப்பான் நோய் எது ?

(A) வாதகரப்பான்

(B) கண்டகரப்பான்

(C) வறட்ச்சிக் கரப்பான்

(D) திமிர்வாத கரப்பான்

168. தூக்கமும் சஞ்சலமும் உண்டாக்கும் குட்ட நோய் எது ?

(A) பாமகுட்டம்

(B) கரணகுட்டம்

(C) கச்சாம்குட்டம்

(D) விற்போடகம்

169. கிரிசாத்துக்கியாழம் கொடுக்க திரும் வர்மம் எது ?

(A) அலிக்காலம்

(B) கல்லிடைக்காலம்

(C) திவளைக்காலம்

(D) சுழியாழடி வர்மம்

170. விடதாரிசூரணத்தின் அளவு கூறுக-

(A) ஒன்று முதல் ஒன்றரை குன்றிஅளவு

(B) பத்து முதல் ஐந்து நெல் அளவு

(C) இரண்டரை முதல் மூன்று பயிறளவு

(D) ஒன்பது முதல் நான்கு வரை அளவு

171. எந்த நோய்க்கு நீரை செம்பு பாத்திரத்தில் ஒரு நாள் வைத்திருந்து பிறகுதான் பயன்படுத்த வேண்டும் ?

(A) அக்கி நோய்

(B) ஊழி நோய்

(C) குன்மம்

(D) சீதபேதி

172. **கோரைப் பாயில் படுப்பதனால் உண்டாகும் பயன் என்ன ?**

(A) பித்த தோஷம் நீங்கும்
(B) பாண்டு ரோகம் நீங்கும்
(C) மூல ரோகம் நீங்கும்
(D) சுர வேகம் நீங்கும்

173. **உடற்பயிற்சி செய்து முடித்து எவ்வளவு நேரம் கழித்து குளிக்க வேண்டும் ?**

(A) அரை மணிநேரம்
(B) கால் மணிநேரம்
(C) சுமார் நாற்பது நிமிடங்கள்
(D) முக்கால் மணிநேரம்

174. **பல் துலக்காவிட்டால் கெட்ட நாற்றமுண்டாகி இந்நோயினையும் பிறப்பிக்கும் அந்நோய் எது?**

(A) கீல்வாதம்
(B) இளைப்பு
(C) சீதக்கழிச்சல்
(D) நடுக்கற் சுரம்

175. **நீரைப் பாதியாகக் காய்ச்சி மறுநாள் குடிக்க எந்நோய் நீங்கும் ?**

(A) திரிதோடக்கோபம் நீங்கும்
(B) பித்தகோபம் நீங்கும்
(C) கொடுஞ்சுரம் நீங்கும்
(D) வாதாதிக்கம் நீங்கும்

176. **நாடுகின்ற நீரிழிவைக் கொல்லும் எது ?**

(A) ஈர்க்கு சம்பா அரிசி
(B) மணிச் சம்பா அரிசி
(C) கேழ்வரகு
(D) கருஸகுருவை அரிசி

177. **அறுசுவைகளில் தெளிவைத்தரும் சுவையும் மென்மையைத் தரும் சுவையும் எது ?**

(A) இனிப்பு, உவர்ப்பு
(B) புளிப்பு, கைப்பு
(C) கார்ப்பு, புளிப்பு
(D) உவர்ப்பு, கைப்பு

178. **தாம்பூலத்தை மெல்லும்போது ஊறும் ஐந்தாவது ஆறாவது நீரை பயன்படுத்த எந்நோய் உண்டாக்கும் ?**

(A) பித்த தோடம்
(B) வாதாதிக்கம்
(C) குன்மம்
(D) நெஞ்சில் கோழை சேரும்

179. **மாலை வெயிலில் காய்ந்தால் பழைய பிணிகள், நீங்கும் எனக்கூறும் நூல் எது ?**

(A) நாலடியார்
(B) பதார்த்த குண சிந்தாமணி
(C) கபிலரகவல்
(D) தேரன் கரிசல்

180. **பனைவேரை சிறப்புக்கற்பமாக கீழ்கண்டவற்றுள் எந்த நோய்க்கு பயன் படுத்தலாம்?**

(A) கரப்பான்
(B) அருகல்
(C) வெண்படை
(D) செவ்வாப்பு

181. **வயப்படுத்துதலை முதன் முதலில் நிகழ்த்திக்காட்டிய மருத்துவர் பிரான்ஸ் ஆண்டன் மெஸ்மர் எந்நாட்டினை சார்ந்தவர் ?**

(A) இங்கிலாந்து
(B) ஆஸ்திரேலியா
(C) நியூசிலாந்து
(D) பிரான்ஸ்

182. **அரிவாளால் தாக்கப்பட்டு கொலை நிகழ்ந்திருந்தால் எந்த இந்திய தண்டனை சட்டத்தின்படி குற்றவாளியாவார் ?**

(A) IPC. 308 & 309
(B) IPC. 306 & 307
(C) IPC. 299 & 300
(D) IPC. 324 & 326

183. மண் அல்லது சகதியுள்ள இடத்தில் கால்பதிவினை எடுக்க எத்தனை விழுக்காடு ஆல்கஹால் கலந்த செல்லேக்கினை பயன்படுத்த வேண்டும் ?

(A) 20 (B) 40

(C) 60 (D) 80

184. Posthumous child' என்று எக்குழந்தையைக் குறிப்பிடுவர் ?

(A) குழந்தை உண்டாகியிருப்பதை போல் நடித்து சில நாட்கள் கழித்து கைகுழைந்தையுடன் வெளிப்படுதல்

(B) கருவுண்டாகியிருக்கும் தாய் 28 வாரங்கட்குப்பின் குழந்தை வெளிப்படும் பொழுது உயிரற்று பிறந்தால்

(C) கருப்பையிலேயே குழந்தையானது உயிரிழந்து விட்டால்

(D) கருக்கொண்ட காலத்தில் கணவர் இறந்து விட்டாரேயானால் கருவானது வளர்ச்சி அடைந்த குழந்தை

185. தற்காப்பு முயற்சியில் காணப்படும் வெட்டுப்பட்ட காயம் எவ்வாறு காணப்படும் ?

(A) இடப்புறம் இருந்து வலப்புறமாக காயம் காணப்படும்

(B) குருதிக் கட்டு காணப்படாது

(C) சிதைவு பட்ட காயம் ஏற்படாது

(D) முன்கையின் மணிக்கட்டின் பக்கமாக காயம் எற்படும்

186. தடிப்புகளில் பச்சைநிற நிறமாற்றம் எத்தனை நாட்களில் எற்படுகிறது ?

(A) 7 - 12 நாட்கள் (B) 3 - 5 நாட்கள்

(C) 5 - 6 நாட்கள் (D) 12 - 14 நாட்கள்

187. சரஎலும்பின் மேல் முனையானது அவ்வெலும்புடன் எந்த வயதில் இணையும் ?

(A) 18
(B) 16
(C) 25
(D) 10

188. சூலை நோயில் கழிச்சலை உண்டாக்க கீழ்கண்ட குழம்புகளில் எதனை பயன்படுத்தலாம் ?

(A) சண்ட மாருத குழம்பு
(B) சாதி சம்பீர குழம்பு
(C) குமட்டி குழம்பு
(D) வீர குழம்பு

189. மாந்த நோயில் வாந்தி உண்டாக்க பயன்படும் வரிக்குமட்டிச் சாறு விழங்கும் அளவு என்ன ?

(A) 5 மி.லி.
(B) 10 மி.லி.
(C) 15 மி.லி.
(D) 30 மி.லி.

190. உடற்பயிற்சி செய்ய வேண்டிய அளவு என்ன ?

(A) தன் வன்மைக்கு சம்மாக
(B) தன் வன்மைக்கு மிகாமல்
(C) தன் வன்மைக்கு காற்பங்கு
(D) தன் வன்மைக்கு அரைப்பங்கு

191. அபரிதமான பெரும்பாடு யாருக்கு அதிகம் ஏற்படுகிறது?

(A) முதல் சூலுக்கு பின்
(B) பன் சூல்காரிக்கு
(C) கருச்சிதைஎக்கு பின்
(D) மேற்கண்ட எல்லா நிலையும்

192. 'பாயுரு' - என்பதன் பொருள் யாது ?

(A) குதம்
(B) குய்யம்
(C) பசதம்
(D) விரேகி

193. தனது படுக்கையில் எவ்விதமான பொருட்கள் இல்லாத போது எலியும், சுண்டெலியும் படுக்கையில் இருப்பதாக எண்ணுவதை எவ்வாறு கூறுவர் ?

(A) Tactile
(B) Microptic
(C) Visual
(D) Psychometer

194. மூலக்கூறுகளின் உயிரிழப்பு முக்கிய உறுப்புகளின் செயலிழப்பு நிகழ்ந்த்திலிருந்து எத்தனை மணி நேரத்திற்குள் நடைபெறும் ?

(A) 1 முதல் 2 மணி நேரம்
(B) 3 முதல் 4 மணி நேரம்
(C) 4 முதல் 5 மணி நேரம்
(D) 5 முதல் 6 மணி நேரம்

195. இந்திய தண்டனைச் சட்டம் 302ன் படி தண்டனைக் குரிய குற்றம் எது?

(A) வன் புணர்ச்சி
(B) இளங்குழந்தயைக் கொல்லுதல்
(C) கருவை சிதைவித்தல்
(D) தற்கொலை செய்து கொள்ள முயற்சி

196. சுடுபடை கலானால் ஏற்பட்ட புண்ணின் குண்டு துளைத்த வாயில் எவ்வாறான அமைப்பு காணப்படும் ?

(A) பெரிதாகவும், ஒழுங்கற்றதாகவும் இருக்கும்
(B) குருதிப் பெருக்கு இருக்கும்
(C) செக்கச் சிவந்து காணப்படும்
(D) சிராய்ப்புகள் காணப்படாது

197. எந்த ஆண்டில் இந்திய மனநோயினருக்கான சட்டம் இயற்றபட்டது ?

(A) 1910
(B) 1911
(C) 1912
(D) 1913

198. 'டிபுடிரின்' வகைப்பாட்டின் படி தீப்பட்ட புண்களில் தோல் முழுவதும் பாதிக்கப்பட்டிருந்தால் எந்த வகையான சொல்லப்படுகிறது?

(A) இரண்டாம் வகை
(B) மூன்றாம் வகை
(C) நான்காம் வகை
(D) ஐந்தாம் வகை

199. வெட்டுப்பட்ட காயத்தில் புது வில வளர்ச்சி ஏத்த்னை நாட்களில் காணப்படும் ?

(A) 3 முதல் 5 நாட்களில்
(B) 5 முதல் 7 நாட்களில்
(C) 7 முதல் 9 நாட்களில்
(D) 9 முதல் 11 நாட்களில்

200. விந்து நீருடன் எந்த அமலத்தினைக் கலந்தால் ஊசி போன்ற மஞ்சள் நிற படிகங்களாக மாறுபாடடையும்?

(A) நைட்ரிக் அமிலம்
(B) பிக்ரிக் அமிலம்
(C) ஹைடிரோகுளோரிக் அமிலம்
(D) சல்பூரிக் அமிலம்